# அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சமாட்டோம்

Phone No 4502 | Regd. No. M. 5458
விலை அரை அணா | இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (16-6-50) வெளியூர் (17-6-50) [இதழ் 280

## எதிர்ப்புகளுக்கிடையே பணியாற்றுகிறோம்

## திராவிடர் இயக்கம் ஏன் வளருகிறது என்பதை எண்ணிப்பாருங்கள்

(0)

## சமுதாயநீதியும், அரசியல்விடுதலையுமே நமது குறிக்கோள்

(0)

### சுதந்திர ஆட்சியில் திராவிடம் சுரண்டப்படுவதேன்?

(:0:)

### மதுரை மாநாட்டில் பொதுச்செயலாளர் சொற்பொழிவு

"வெள்ளையன் ஆட்சி புரிந்ததால்தான் இந்த வெங்கொடுமை என்றால், பத்து தமிழன் வெளிநாட்டுக்கு அடிமையாகச் செல்லும்போது ஏன், ஐந்து மார்வாடிகளாவது செல்லவில்லை? சென்றாலும், மலேயாவிலும் மார்வாடியாக-வட்டிக்கடைக்காரனாகத்தானே இருக்கிறான்? தமிழன் அங்கும் வண்டியிழுக்கிறான். ஏன் இங்கிலை? இக்காட்சியினை எண்ணிப்பார்க்கும்போதுதான், 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று நாம் கூறவேண்டியிருக்கிறது" என்று தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், மதுரை மாநாட்டில் பேசியபோது குறிப்பிட்டார்.

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமைத்தோழர்களே, தாய்மார்களே!! மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு இரண்டு நாட்களாக நடைபெற்று இப்போது முடியும் தருவாயில் இருக்கிறது. இந்த மாநாட்டில் கூடியுள்ள உங்கள் ஆர்வமும், உணர்ச்சியும் எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறதென்றாலும், இயற்கையாக சர்க்காருக்கு அது மருட்சியைத்தரத்தான் செய்யும். திராவிட முன்னேற்றக் கழகம், எதிர் காலத்தில் செய்யவிருக்கும் பணியினை உங்களுக்கு இம்மாநாட்டில் பேசிய தோழர்களும், தீர்மானங்களும் மக்கள் உற்சாகம் தந்திருக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. இத்தனை ஆண்டுகள் நாம் இயக்கத்திலே உழைத்த பலனின் அறிகுறிதான் இந்த மாநாடு. என்றாலும், நம கொள்கைகள் நாடு முழுவதும் பரவவில்லை. இங்கு கூடியுள்ள உங்கள் உணர்ச்சி, இம்மாநாட்டோடு இருந்துவிடாமல், எங்கும் பரப்பப்படவேண்டும் நம்மீது சந்தேகப்படுவோருக்கு சாந்தமாக—அரசியல் விரோதிகளுக்கு அன்பாக, நம் கொள்கைகளை எடுத்து விளக்க வேண்டும்.

**இடையிருந்து...!**

தி. மு. கழகம், திராவிடர் கழகத்தின் ஓர் பெரும் படை. திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரண்டு போர் முனைகள். திராவிடம் கழகம், யாராலே தனிப்பட்டவராலோ நடத்தப்பட்டாலும்; அது திராவிட இனம் விழிப்படைய பாடுபடும் என்பது மட்டும் உறுதி. திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் சேர்க்கை, தேர்தலில் கலந்து கொள்ளாதவர்கள் உள்ள கழகம் என்று, யாரும் எண்ணத் தேவையில்லை. அரசியல் ஆருடக்காரர்கள் இரண்டு வகையிலே ஆயாசப்படுகிறார்கள். திராவிட இயக்கப் போர்வையைப் போர்த்திக்கொண்டு தேர்தலில் ஈடுபடலாம் என்பவர் ஒருவர். தங்களிடம், உள்ள பத்திரிகை வலிவு—பணபலம்—ஆகிய வற்றால் நம்மை இழுத்து விட்டு, தோற்கடித்துவிடலாம் என்று எண்ணுகின்றனர் மற்றொருவர். இப்படி ஒருபக்கம் நம்மை சர்க்கார் இழுக்கிறது. மற்றொரு பக்கம் சுயநலவாதிகள் இழுக்கின்றனர். இதற்கிடையே இருந்து நாம் பணியாற்ற வேண்டியிருக்கிறது! இப்படி, நாம், பலாத்காரத்திலும், பதவிப் போட்டியிலும் ஈடுபடாத நம்மைக் கண்டு அரசாங்கம், இவர்களின் நோக்கம் தான் என்ன? என்று யோசிக்கிறது.

**நாம் வளருகிறோம்!**

ஒரு மரம்-பூக்கள் இல்லை-பழம், பசுந்தளிர் இல்லை—ஆனால் வளர்கிறது! சிறு பிள்ளைகள் கல் கொண்டு வீச, அதிலே கனிகளில்லை—பறவைகள் தங்க—தங்க இடமில்லை—யோகிகள் தங்க அந்த மரம் நிழல் தரவில்லை—கோடரி கொண்டு வெட்டினாலும், வெந்நீர் விட்டு வேகவைத்தாலும், அந்த மரம் வளர்கிறது! ஒரு கிளை ஒடிந்து விழுகிறது. ஆனாலும் வளருகிறது!! கார் ஓட்டத்தெரியாதவர்கள் அதில மோதி அழியக் கப்பல் கட்டுவதற்கு மரக்கலமாக—தச்ச வேலைக்கு மரமாக—தூக்குமேடையாக - அம்மரம் பயன்படலாம்—ஓவியக்கார

(3-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக்கு ரூ. 8,424 கோடி

### ரஷியாவின் வரவு செலவுத் திட்டம்

மாஸ்கோ, ஜூன். 14—

நேற்று இரவு ரஷியாவின் நிதி அமைச்சர் தோழர் அர்சேனி சவேரி, ரஷிய வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்தார். அதில் நாட்டுப் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 70,940 மில்லியன் ரூபிள்களாகும் அதாவது, ரூ. 8,424 கோடி. இத்தொகை நாட்டு மொத்த வருவாயில் 18½ சதவிகிதம் ஆகும்.

வரவு செலவுத்திட்டம் பின்வருமாறு:—

மொத்த வருமானம் சுமார் ரூ 75,600 கோடி மொத்த செலவு சுமார் ரூ.74,882 கோடி. மிச்சம் சுமார் ரூ 718 கோடி.

வரவுசெலவுத்திட்டம்பற்றி பேசியபோது, நிதி அமைச்சர் நாட்டுவருவாயில் பெரும் பகுதி தேசிய பொருளாதார—கலாசார முன்னேற்றத்துக்கும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கும் செலவிடப்படுவதாகக் கூறினார்.

## அரிசிப் பங்கீட்டளவு குறைக்கப்படுகிறது

## 8 அவுன்ஸை 7 அவுன்சாக்க முயற்சி

### அளவு குறைவது பற்றி ஆலோசனைக் குழுவில் எதிர்ப்பு

சென்னை, ஜூன் 14—

"அரிசி ரேஷனை 8 அவுன்சிலிருந்து 7 அவுன்சாகக் குறைப்பதுபற்றி, உங்களுடைய யோசனைகளைக் கேட்க விரும்புகிறேன். உணவுப் பங்கீட்டைக் குறைப்பது என்பது வரவேற்கத்தக்கதாக இராது என்பது உண்மையே. ஆயினும், உணவு நெருக்கடியைத் தீர்க்க இதைவிட வேறு வழியிருப்பின் தெரிவிக்கவேண்டுகிறேன்.'

என்று சென்னைப் பிரதமர் தோழர் குமாரசாமிராஜா அவர்கள், புதன்கிழமையன்று, உணவு ஆலோசனைக் குழு முன் பேசுகையில் குறிப்பிட்டார்.

மந்திரிகளும், உத்தியோகஸ்தர்கள் பலரும் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

முதலமைச்சர் ராஜா மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"உணவு நெருக்கடியைத் தீர்த்து மக்களைப் பட்டினியினின்றும், பசியினின்றும் காக்க வேண்டியது நம் பொறுப்பாகும். இது சம்பந்தமாகப் பேச நாம் கூடியது, இது மூன்றாவது முறையாகும்,

சென்ற ஆண்டு இருந்ததைவிட, இப்பொழுது உணவு நிலைமை மிகமிக மோசமாக இருக்கிறது. ஆனால், இந்த நிலைமை நீடிக்கும் என்று சொல்வதற்கில்லை. பருவ நிலையில், மாற்றங்கள் காணப்பட்டுவருகின்றன. இவ்வாண்டு பருவமழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிமழைபெய்யுமானால், இதன் பலனை அடுத்த ஆண்டில்தான் காண முடியும். அதுவரையில் உணவுப்பஞ்சம் நீடிக்கத்தான் செய்யும். ஆகவே, இந்நிலையைச் சமாளிக்க நம்மாலியன்றதை நாம் செய்யவேண்டும். இதற்கு உங்களுடைய ஆலோசனை தேவை" என்று கூறினார்

எதிர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது

இங்ஙனம், அரசியலார் உணவுப் பங்கீட்டின் அளவை மேலும்குறைப்பதற்கு உணவு ஆலோசனைக் குழுவிலேயே எதிர்ப்பு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுதிருக்கும் பங்கீட்டளவே மிகக் குறைவானதென்றும், சர்க்காருக்கு எவ்வளவு கஷ்டமிருப்பினும் இந்தக்குறைந்த அளவை மேலும் குறைப்பது அறிவுடைமையாகாது என்றும் சிலர் கூறுகின்றனர்.

## சென்னையில் அரிசிப் பஞ்சம் அதிகரிக்கிறது

### 1950-ல் 2 லட்சம் டன் பற்றுக்குறை

தற்போதுள்ள சென்னை மாநில உணவுநிலை பற்றிய ஒரு விளக்கவுரை பின்வருமாறு:—

சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு அரிசி உற்பத்தி நிலை மிகவும் மோசமாகியுள்ளது. 1949 மே 21-ல் 4,55,669 டன்னாக இருந்தது 1950 மே 20-ல் உத்தேசமாக 2,37,000 டன்களாகக் குறைந்து விட்டது. முந்திய ஆண்டைவிட பிந்திய ஆண்டில் உற்பத்தியும் குறைந்துவிட்டது. அதாவது 1949-ல் உற்பத்தி 9,16,295 டன்கள் 1950ல் 7,24,974 டன்கள்.

1950 மே 20முதல் டிசம்பர் கடைசிவரையில், அரிசி கையிருப்பு, செலவு முதலிய விபரம்: ஏப்ரல் 29ல் கையிருப்பு 2,77,007 டன்கள் மத்தியசர்க்கார் மூலம் எதிர்பார்க்கப்படுவது 1,10,000 டன்கள், எதிர்பார்க்கப்படும் உற்பத்தி, 6,97,000 ஆகமொத்தம் எதிர்பார்க்கப்படும் அளவு 1084000 டன்கள்.

### மேலும் 40,000 டன் பெட்ரோல் இறக்குமதி

புதுடில்லி, ஜூன் 15—

தென்னிந்தியாவிலுள்ள நான்கு துறைமுக நகரங்களில், பெட்ரோல் ரேஷனை எடுத்துவிட இந்திய சர்க்கார் முடிவுசெய்திருப்பதையொட்டி ஏற்கனவே இறக்குமதி செய்யப்படும் பெட்ரோல் அளவைவிட மேற்கொண்டு 40,000 டன் பெட்ரோலை, பெட்ரோல் கம்பெனிகள் இறக்குமதி செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

கல்கத்தாவில் பெட்ரோல் ரேஷன், ஜூலை முதல் தளர்த்தப்படும் என்றும், செப்டம்பர் 1ல் முதல் பெட்ரோல் ரேஷன் அடியோடு எடுபட்டுவிடலாம் என்றும் கூறப்படுகிறது.

செப்டம்பருக்குமுன் இந்தியாவிலுள்ள பெட்ரோல் நிலைமை பரிசீலனைசெய்யப்படும்போது, உள்நாட்டிலும் பெட்ரோல் ரேஷனை எடுப்பதா என்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

### காடு அழைக்கும் நிலை... பல் முளைக்கிறது

பக்லா என்பார் [illegible] வயது [illegible] என்னகுழந்தை இப்பொழுது ஒன்று புதிதாக முளைத்திருக்கிறது [illegible] என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

மாலை மணி

சென்னை 16—6—50 வெள்ளிக்கிழமை

# ஐ. நா. முயலட்டும்

உலகில் சாந்தத்தையும் சமாதானத்தையும் நிலைநிறுத்த, எத்தனையோ 'அவதாரங்கள்', 'மகான்கள்', 'மகரிஷிகள்', 'தூதுவர்கள்', 'ஆழ்வார்கள்', 'நாயன்மார்கள்', 'பக்தர்கள்' தோன்றியும் எதனாலும் எந்த சாந்தியும், சமாதானமும் ஏற்படவில்லை!

'அவதாரங்கள்' வேண்டுமானால் தங்களைப் பொறுத்த மட்டில், சாந்தமும் சமாதானமும் பெற்றிருக்கலாமே யொழிய, அவைகளால் உலகிற்கு நன்மை ஏதும் ஏற்பட்டதாகக் கூறமுடியாது, மாறாக அவைகளால் துன்பங்கள் ஏராளமாக ஏற்பட்டிருக்கின்றன.

உலகை உள்ளபடியே திருத்த வேண்டுமென்று கருதி, அறிவு வழி வாழ்க்கையை அமைத்துச் சென்ற உத்தமர்களால்தான் உலகம் ஒரு அளவுக்கு உயர்ந்து வந்திருக்கிறது. பக்தியைப் பரப்பவந்த 'அவதாரங்கள்', பக்தி வெறி, சாதி வெறி, சமயவெறி அவைகளிலிருந்து நிறவெறி ஆகியஇவைகளை கிளப்பி வந்ததால் தான், மக்களில் ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஆங்காங்கு வளர்ந்து, உலகம் இன்று அல்லோல கல்லோலப்பட்டு வருகிறது.

தென் ஆப்பிரிக்காவில் வெள்ளை நிறத்தினர்க்கு ஏற்பட்டிருக்கும் நிறவெறி, இவ்வளவு அவ்வளவு என்று அளவிட்டுக் கூறமுடியாது. அங்கு நிறவெறி போதை கூச்சலும், ஆடும் ஆட்டமும் அகில உலகமும் கேட்கும்படி கோரத்தன்மை பூண்டிருக்கின்றன. இதனை, உலகைக் காப்பாற்றுவதற்கென்று எழுந்த ஐக்கிய நாடுகள் மன்றமும், பார்த்துக் கொண்டு தானிருக்கிறது! தென் ஆப்பிரிக்காவில் நிகழும் வெறியாட்டத்தை அடக்க, அதனால் இன்னமும் இயலவில்லை! இயலவில்லை என்பதுமட்டுமல்ல, நிறவெறியைத் தாண்டவமாட விட்டிருக்கும் தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்திற்கு இடமும் அளித்து, மதிப்பும் கொடுத்து, அணைத்துக் கொண்டிருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது!

தென் ஆப்பிரிக்காவில் இன்று நிறவெறி கொடுங்கோலாட்சி புரிந்துவரும் மலான் சர்க்கார் பொதுவாகக் கறுப்பு நிறத்தினர்க்கும், குறிப்பாக இந்தியத் துணைக்கண்ட மக்களுக்கும் இழைக்கும் கொடுமைகள் சகிக்கமுடியாதனவாக இருக்கின்றன. தென் ஆப்பிரிக்காவின் சுதேசி மக்களையே விரட்டுகின்றனர் என்றால், எப்படிப்பட்ட அநீதி—அக்கிரம—ஆணவ—ஆதிக்க ஆட்சியை வெள்ளை நிறத்தினர் நடத்திவருகின்றனர் என்பதை, ...ல் அறிந்துகொள்ளலாம். ...ாலும் வெள்ளை நிறத்... எப்படி வெளிநாட்ட... அதே போல்தான் கறுப்பு நிறத்தினராகிய இந்திய மக்களும் வெளிநாட்டவராவார்கள். உண்மை இவ்வாறிருக்கையில் அங்கு வெள்ளையர் வாழவும், கறுப்பர் வெளியேறவும் ஆன நிலைமை நீடிப்பது எவ்வாறு நீதியின் பாற்பட்டதாகும்? இந்திய மக்கள் அங்கு வாழ உரிமையற்றவர்களாக விரட்டியடிக்கப்படும் அநீதியை ஐ. நா. மன்றம் ஏனோ இன்னமும் அனுமதித்துக் கொண்டிருக்கிறது? நிறவெறி பிடித்தலையும் தென் ஆப்பிரிக்கா சர்க்காரை அடக்கி ஒடுக்க ஜனநாயகத்தத்துவத்தில் அக்கறை உள்ள பிறநாடுகள் இன்னமும் முன்வராமலிருப்பானேன? வெள்ளையர் இனத்தைச் சேர்ந்த நாடுகள் என்ற முறையில், மேலைநாடுகள் மௌனம் சாதிக்கின்றன என்றால், அந்த நாடுகள் ஐ. நா. மன்றத்தில் இருந்தால்தான் என்ன இல்லாவிட்டால்தான் என்ன? இப்படிப்பட்ட நிலைமைகளால், இதுவரையில் எந்த ஒரு உருப்படியான செயலையும் அது தோன்றிய காலத்திலிருந்து சாதிக்க முடியாத ஐ. நா கலைக்கப்படுவது எவ்வளவோ மேலாகுமே! பிறகு பலப்பரீட்சையின் மூலமாவாவது ஏதாவது ஒரு முடிவு வெள்ளையர்க்கும், கருப்பர்க்கும் இடையே ஏற்பட்டுவிடுமே!

'அவதாரங்கள்' செய்ய முடியாத சாந்தியையும், சமாதானத்தையும் ஐ. நா. மன்றம் செய்து முடிக்கும் என்று, உலக மக்கள் ஆரம்பத்தில் நம்பினர். அந்தநம்பிக்கையைக் கை நழுவ விட்டுவிட வேண்டிய அளவுக்கு, ஐ. நா. மன்றம் நிலைமையைக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது

ஐ. நா. மன்றம், தென் ஆப்பிரிக்காவுக்கு அமைதியான வழிகளில் பாடங்கற்பித்தால் தான், நல்லதொரு சூழ்நிலை உலகில் ஏற்பட வசதி ஏற்படும். தென் ஆப்பிரிக்க சர்க்காரை முழு நிறவெறி மனப்பான்மையோடு உலாவ விட்டுவிட்டு, தெ. ஆ.-இந்தியா-பாகிஸ்தான் இவற்றினிடையே நிகழும் எந்த வட்டமேஜை மாநாடும், உருவான பலனைத்தரும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆகவேதான், தெ. ஆப்பிரிக்க சர்க்காருக்கு நல்ல பாடங்கற்பிக்கும் முறையில், அதனை ஐ. நா. மன்றத்திலிருந்து விரட்டி அடிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை, கிழக்கு ஆப்பிரிக்க இந்தியர் காங்கிரஸ் நிறைவேற்றியிருக்கிறது.

**"தென் ஆப்பிரிக்காவில் இருக்கும் ஐரோப்பியரல்லாத எல்லாக் குடிமக்களுக்கும் முழு பிரஜா உரிமை அளிக்கும்வரை, தென் ஆப்பிரிக்காவை, ஐக்கிய நாடுகள் மன்றத்திலிருந்து விரட்டிவிட, எல்லா ஜனநாயக நாடுகளும், குறிப்பாக, ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் இருக்கும் சுதந்திர நாடுகள் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்"** என்பது தீர்மானமாகும்.

ஜனநாயகத் தத்துவத்தில் நம்பிக்கைகொண்ட நாடுகள், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முற்படுவதோடு, ஐ. நா. மன்றத்தை நீதியோடும், நேர்மையோடும், துணிவோடும், திறத்தோடும் அறிவுடம்பட்ட நெறியில் கொண்டு செல்ல முனைய வேண்டும்.

சாதிவெறி, சமயவெறி, நிறவெறி, இனவெறி ஆகியவற்றை ஒழித்து அமைதியை அகில உலகத்திலும் நிலவச் செய்ய 'அவதாரங்களால்' தான் முடியவில்லை என்றால், அறிவு வழியிற்செல்லும் ஐ. நா. மன்றமாவது முயலுமாக!

## சென்னைக்கு மேலும் அரிசி

**சென்னை, ஜுன் 14—** மத்தியசர்க்கார் சென்னைக்கு மேலும் 2 50,000 டன் உணவுப்பொருள் அனுப்ப உத்தேசித்துள்ளது. ஏற்கனவே தருவதாக வாக்களித்துள்ள 3,00,000 டன்னையும் சேர்த்தால் 5,50,000 டன் சென்னைக்குக் கிடைக்குமெனத் தெரிகிறது. இந்த மொத்த அளவில் 3,00 000 டன்தான் அரிசியாகத் தரப்படுமாம்.

## 'சவுக்கடி' வழக்கு

**தூத்துக்குடி, ஜுன் 14—** 13—6—50 செவ்வாயன்று மீண்டும் 'சவுக்கடி' வழக்கு இவ்வூர் சப் டிவிஷனல்மாஜிஸ்டிரேட் முன்னிலையில், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சர்க்கார்தரப்பு சாட்சியாக உதவி போலீஸ் சூப்பரின்டென்ட் நடராஜபிள்ளை, கலெக்டர் ஆபீஸ் சிப்பந்தி, அச்சாபீஸ் சிப்பந்தி உலகநாதன் ஆகியோர் விசாரிக்கப்பட்டனர், தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி ஆகியோர் சார்பாக, வழக்கறிஞர்கள் பெரும்படையான், சோமயாஜுலு ஆகியோர் சாட்சிகளைக் குறுக்கு விசாரணைசெய்தனர். மீண்டும் வழக்கு 26—6—50 க்கு ஒத்தி போடப்பட்டிருக்கிறது.

## கார்டன்வாக்கர் இந்தியா வராததேன்?

**லண்டன், ஜுன் 15—** காமன்வெல்த் உறவு மந்திரி தோழர் கார்டன்வாக்கர்தான் ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்புகையில் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்யலாம் என்றும், ஆனால் முக்யவேலை எதுவும் இல்லை என்றும் மிகக் குறுகிய காலமேதான் தங்கலாம் என்றும் கூறினார்.

காஷ்மீர் விஷயமாக சமரசம் செய்துவைக்க முயற்சி எடுக்கும் டிக்ஸனின் வேலை பாதிக்கப்படலாகாதென்பதற்காகவே, ஆஸ்திரேலியாவுக்கு போகும்போது அவர் இந்தியா பாகிஸ்தானுக்கு வர உத்தேசிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

## ஸ்மட்ஸ் உடல்நிலை மோசமாகிறது

**பிரிடோரியா, ஜுன் 15—** ஸ்மட்ஸின் நிலைமை இன்று மிகவும் மோசமாகிவிட்டதென்று தெரியவருகிறது. டாக்டர்கள் அவர் உடல் நிலைமை பற்றி ஊர்ஜிதமாக எதுவும் சொல்ல தயங்குகிறார்கள். சென்றவாரம் இருந்த நம்பிக்கை இப்போதில்லை.

## திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுக் கூட்டம்

**சோழவந்தான், ஜுன் 11—** தி. மு. க, செயற் குழுக் கூட்டம், இன்று பகல் 2-மணிக்கு 'பனகல் இல்லத்தில்' நடைபெற்றது. கூட்டத்திற்கு கீழ்கண்ட செயற்குழு உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

தோழர்கள் சி. என். அண்ணாத்துரை, பொன்மலை ராங்குசம், எம். எஸ். சிவசாமி, எஸ். எஸ். எம். மொய்தீன், சி. பி சிற்றரசு, அம்பில் தர்மலிங்கம், ஜி. பி. சோமசுந்தரம், ஈ வி. ஏ. வள்ளிமுத்து, ஏ சித்தையன், கே. கே. நீலமேகம், பட்டுக்கோட்டை சவுரிராசன், பி. பழனிச்சாமி, மதுரை எஸ். முத்து, இரா நெடுஞ்செழியன, என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், கே ஏ. மதியழகன்

(கூட்டத்திற்கு வரமுடியாமைக்கு வருந்தியும், தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளுவதாகவும் கடிதம், தந்தி அனுப்பிய உறுப்பினர்கள்)

சிவகெங்கை ராஜசேகரன், அருப்புக்கோட்டை சிவசண்முகசுந்தரம், குமாரதணிகாசலம், சென்னை சத்திபவாணி முத்து, நாகர்கோயில் வி. எம். ஜான்

கூட்டத் துவக்கத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், கூட்டநோக்கத்தை விளக்கிக் கூறினார்.

பின்னர், அரசியலாரால் அண்மையில் 1-வது பாரம் முதல், 10-வது பாரம் வரை பள்ளிகளில் கட்டாய பாடமாக இந்தியைப் புகுத்தப்பட்டு, உடனே ஓராண்டு நிறுத்திவைத்துள்ள உத்திரவு பற்றியும், ஏற்கனவே பள்ளிகளில் புகுத்தியுள்ள கட்டாய இந்தியைப்பற்றியும் உறுப்பினர்களிடையே விவாதம் நடைபெற்றது. அனைவரும் தங்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தபின், ஒருமனதாக தீர்மானத்திற்கு வந்தனர்.

அடுத்தபடியாக இயக்கத் தோழர்கள் எழுதியுள்ள புத்தகங்கள் மீது, அரசியலாரால் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளைப் பற்றியும் உறுப்பினர்கள் விவாதித்தனர்.

மற்றும் மாகாண மாநாடு, உறுப்பினர் சேர்த்தல் ஆகியவைகளைப் பற்றியும், உறுப்பினர்கள் தங்களின் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இறுதியாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரே மனதாக நிறைவேற்றப்பட்டன.

1. அரசாங்கத்தார், அரசியல் மொழி என்ற பெயரில், இந்தியை இரண்டாவது மொழி என்ற பெயருடன் பள்ளி மாணவர்களுக்கு முதல் பாரம் முதல்கட்டாயப்படுத்தியிருப்பதை வன்மையாகக் கண்டிப்பதுடன், பன்னிரண்டு வயதுக்குட்பட்ட மாணவர்கள், மூன்று மொழியைப் பயில்வது மிகவும் கடினமாகையாலும், ஆங்கிலத்தை விலக்குவது அறிவு வளர்ச்சியையே தடுப்பதாக ஆகுமாதலாலும், அரசியலார் அடுத்த பள்ளி ஆண்டு தொடங்கு முன்பாவது வேண்டுமானால் இந்தியை விருப்பப்பாடத்தில் ஒன்றாக அமைக்க வேண்டுமெனவும், அவ்வாறு செய்யாவிடில் நேரடி நடவடிக்கை துவக்க நேரிடுமென தி. மு. க. செயற்குழு தீர்மானிக்கிறது.

2. இயக்கத் தோழர்கள் எழுதியுள்ள புத்தகங்களின் மீது, அரசாங்கத்தார் நடத்தும் வழக்குகளில் அபராதம் விதிக்கப்பட்டால், எவரும் அபராதம் கட்டுவதில்லையென தி. மு. க. செயற்குழு தீர்மானிக்கிறது.

கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறப்பட்டு, இனிது முடிவுற்றது.

## டான்யூபில் ரஷ்ய நடவடிக்கை

**பெல்கிரேட், ஜுன் 15—** டான்யூபில் ரஷ்ய நடவடிக்கைகளை எதிர்த்து யூகோ மேற்கு நாடுகளுடன் தொடர்பு கொள்ளாதபடி தடுத்து வருவதை ஆட்சேபித்தும் ரஷ்யா டான்யூப் கன்வென்ஷனை மீறுகிறதென்று குற்றம் சாட்டியும் யூகோஸ்லாவியா இரண்டாவது குறிப்பை ரஷ்யாவுக்கு அனுப்பியிருக்கிறது.

டான்யூபில் ரஷ்ய நடவடிக்கை கோடை காலம் முழுவதும் நீடிக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

## டெலிவிஷனில் கண்ட தற்கொலை நிகழ்ச்சி

**டெக்ஸாஸ், ஜுன் 15—** [illegible] டெலிவிஷன் செய்யப்பட்டுக்கொண்டிருந்தபோது, ஒருவன் அந்த இடத்திற்கு வந்து துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு மாண்டான்.

இச்சம்பவத்தை டெலிவிஷன் மூலம் பார்த்த நீதிபதி, வீட்டை விட்டு நகராமலேயே தற்கொலை காரணமாக அம்மனிதன் இறந்தான் என்று பிரேத விசாரணை தீர்ப்பைக் கூறிவிட்டார்.

## நெருக்கடியைத் தீர்க்க உணவை சேகரித்துவைக்கவும்

**பெர்னே, ஜுன் 15—** அவசர நிலைமை ஏற்பட்டால், அச்சமயத்தில் உபயோகிக்கப்படுவதற்காக ஒவ்வொரு பிரஜையும், உணவுப் பொருள்களை சேமித்து வைத்துக்கொள்ளவேண்டும் என்று ஸ்விஸ் சர்க்கார் முன்னெச்சரிக்கை செய்திருக்கின்றனர். இதனால் யுத்தம் வரும் என்று அர்த்தமில்லை என்றும் சர்க்கார் விளக்கியிருக்கிறது.

## ஏஜெண்டு தோழர்களுக்கு

ஏஜெண்டு தோழர்கள் பாக்கித்தொகையை, இம்மாதம் 20-ம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்கு, மேற்கொண்டு பத்திரிகை அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்
"மாலைமணி"

# மலேயா சென்றாலும் மார்வாடி மார்வாடிதான்

## காலமாற்றத்தை கவனிக்கட்டும் காமராஜர்கள்!

## ஜனநாயகத்தை நிலைநாட்ட நம்மைத் தவிர வேறு நாதியில்லை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் ... ஓவிம ... வ ... பாடகனுக்கு அது பாடம் பயிற்சியையுந்தரலாம். ஆனால் மரம் மட்டும் ஒன்றுதான். அதைப்போலத் தான் நமது திராவிட இயக்கம், இருபத்து ஐந்தாண்டுகளாக பணக்காரர்களால், பொப்பிளி அதிகக் காரர்கள், ஜமீன்தார்கள்—தியாகராயர் போன்றவர்களால் வளர்க்கப்பட்டது. இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகமாக ஓங்கி வளர்ந்துள்ள இந்த மரம் அரசியலில் ... லந்ததாகவில்லை. ஆனாலும் ஓங்கி வளருகிறது. இந்த உண்மையை, மாற்றுக் கட்சியினருக்கு மதியிருக்குமானால், இதிலேதான் அவர்கள் சிந்திக்கப் பார்க்கவேண்டும். சீனாவிலே மா-சே-துங் நாட்டைக் கைப்பற்றும்வரை அவனை யாருக்கும் தெரியாது. நாட்டை மீட்டுகின்ற முன்பு மக்களுக்குசன்யாட்சன், சாதாரணமாகத்தான் இருந்தான். பத்திரிகைகள் தாக்கித் தாக்கி எழுதியும், நம் கட்சி அழியவில்லை. அரசியல் சூதாட்டக்காரர்கள் அனைதை யெல்லாம் செய்தும், நம் இயக்கம்அழியவில்லை. மாற்றுக் கட்சித் தோழர்கள் எவ்வளவோ நமக்கு இன்னல் இழைக்கின்றனர். ஆனாலும் நாம் அழியவில்லை! நாம் வளருகிறோம்! சில நேரத்தில் எனக்கே புரியவில்லை, ஏன் நாம் வளருகிறோம் என்று! ஆனால், எதிரிகளுக்கு எப்போதும் புரியவில்லை! இதைத்தான் இவர்கள், குறிப்பாகத் தோழர்காமராஜர் அறியவேண்டும்.

### முதல் வெற்றி!

சட்டப்படிஎன்னதண்டனை இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம், இந்நாட்டை தென்னாடு-அதில் வாழ்வோர் திராவிடர் என்றழைக்கிறது. என்னைப் பற்றி 'இலட்சிய வரலாறு' வழக்கில் மாஜிஸ்ட்ரேட் கேட்டார், 'நீயார்' என்று? 1950-லே, நீர் இந்தியர்தானே என்று என்னைக் கேட்க தைரியமில்லை! 'தினமணி' 'சுதேசமித்திரன்' தேசிய பத்திரிகைகள் எல்லாம், இந்தியர்தான் இன்னார் என்றெழுதும்போது—மாஜிஸ்ரேட் என்னைக் கேட்கிறார், நீ ஆரியனா? திராவிடனா? என்று ஒரு சமயம் அவருக்கே அதிலே நம்பிக்கையில்லையோ, என்னவோ நமக்குத் தெரியாது. இது, திராவிட இயக்கம் பெற்ற முதல் வெற்றி.

### நம்மை நாம் மறந்தோம்

நாம் திராவிடர்கள். நாம் ஓர் இனம், தன் ... மொழியினை மறந்து வாழ்கின்ற இனம். மறந்துபோன இனத்தின் பெயரை மீண்டும் எழுச்சியுறச் செய்தவர்கள் நாம் நாடு பாழ்பட்டு இருக்கும்போது, புகுந்து, நாம் வெற்றி கண்டோம். பிரமனின் முகத்திலே பிறந்தவன் பிராமணன், தோளிலே பிறந்தவன் க்ஷத்திரியன், தொடையிலே பிறந்தவன் வைசியன் காலிலே பிறந்தவன், சூத்திரன் என்று பேசியவர்கள், நால் வருணம் நாட்டிலே இருக்க வேண்டும். அது மனுவால்-ஏன் ஆண்டவனால் வரைக்கப்பட்டது, என்று பேசி வந்தோர் இன்று, 'ஆரியராவது? திராவிடராவது?' என்று பேசத்தானே செய்கிறார்கள்? ஒரு பெரிய இனம்-ஆறு கோடி மக்களைக் கொண்டது, இன்பத்தமிழ் இலக்கியத்தைக் கொண்ட மக்கள், இமயத்திலே கொடி பறக்கவிட்ட மக்கள், கேலி பேசிய கனகன், விசயன் தலையிலே கல் சுமக்கச் செய்த மக்கள்தான் இன்று, தங்களை மறந்து வாழ்கின்றனர். நம்முடைய பெயரையும்—நாட்டையும் எப்படி இழந்தோம், யாரிடம் இருந்து பெறவேண்டும் என்ற வழியினையும் கண்டு பிடித்துவிட்டோம் இத்தகைய மாபெரும்மாநாடு, அத்தகைய உள்ள உறத்தைத் தரத்தான் செய்யும்.

### என்ன ஆயிற்று?

காமராஜர் சொன்னார் 'அண்ணாத்துரை நாடகம்கூட ஆடத் தொடங்கிவிட்டான், இவைகள் வீண் வேலை' என்று. நான் எழுதுகின்ற இருபது புத்தகங்களை, பத்து நாடகங்களை, ஐந்து சினிமாக்கதைகளை வெளியிட்டால், அதற்குத் தடையில்லை, அவைகளைசென்சாருக்கு அனுப்புவதேயில்லை என்று, என்னிடம் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளட்டும் சர்க்கார், அப்புறம்காமராஜரே சொன்னாலும், அவர் 'அட்ரசை' நம்பமாட்டார்களே, மக்கள்! வெட்கம், மானம், ரோஷம், இருந்தால் செய்வாரா காமராஜர்? 'சினிமாவுக்குப் போன அண்ணாத்துரை இனித் திரும்புவதேது' என சிலர் பேசிக்கொண்டனர். என்ன ஆயிற்று இப்போது? வரும்போது கே. ஆர் ராமசாமியை அழைத்துக் கொண்டுதானேவந்தேன். பட முதலாளிகள் கூப்பிடு கருணாநிதியை, ஏ. கே. வேலனை கதையெழுத நெடுஞ்செழியன் வருவாரா? என்றில்ல தானே ஆயிற்று. எழுதியது ஒரே ஒரு படம் 'வேலைக்காரி' இதிலே இத்துணை வெற்றி கண்டோம்.

### நமது பணி வீணாகாது

நம்முடைய தொண்டு என்றும் வீண் போனதில்லை. பத்து ஆண்டுகட்கு முன்னே, படங்களிலே நீங்கள் பார்த்திருப்பீர்கள், ராஜ, ராஜமார்த்தாண்டன் வாழ்க என்று, இப்போது மன்னர் மன்னன் வாழ்க! என்னை, தோழர்களெல்லாம் தள தி. தளபதி என்றழைக்க, பிறகு அதை எதிரிகளின்உள்ளத்தேபதிக்க அவர்கள் கேலி செய்ய, பிறகு அது, சுதேசமித்திரன் பத்திரிகையிலே, சரியப்பாவுடன் போய், ஒட்டிக்கொள்ளவதானே செய்தது? 'தினமணி' சுதேசமித்திரன்' திட்டுகிறதே 'தளபதி சரியப்பா' என்று எழுத வேண்டிவந்துவிட்டு, தளபதி சரியப்பா என்று? ஆகவே நிச்சயம் நமது பணி வீண் போகாது.

### நமக்கு முழு வெற்றி?

உங்களைப்பார்த்து யாராகிலும், 'திராவிடன், திராவிடன் என்கிறீர்களே, அதற்கென்ன பொருள்? உங்கள் நோக்கம் தான் என்ன' என்று கேட்டால், நாங்கள், திராவிடர்கள். நாங்கள் இனத்தால் ஒருவர்—மொழியால் ஒருவர். பிறப்பிலே ஜாதி காணாதவர்கள்—ஆண்டவனுக்கு உருவத்தைக் கற்பிக்காதவர்கள்—அடிமை என்பதை அறியாதவர்கள் எங்கள் முன்னோர்கள். பண்டைய நாட்டிலே படை வீரர்களாக வாழ்ந்தவர்கள் நாங்கள்—ஏறுகளாக, வீறு கொண்ட தமிழ்ப் புலவர்களாக, வாழ்ந்தவர்கள் நாங்கள்—பொதவுடமைத் தத்துவத்தைப் போற்றிப் புகழ்ந்தவர் என்னாட்டார் ஆனால் இன்று, நாங்கள் தாழ்ந்திருக்கிறோம்; ஆகவே வீழ்ந்து கிடக்கிறோம், வாழ—உரிமை பெற போராடத் துணிந்து விட்டோம் என்று கூறுங்கள். நாம் இதிலே, தோல்வியோ, வெற்றியோ பெறலாம். அது அல்ல முக்கியம். நம்மை நாம் உணர்கிறோம் என்ற நிலைமை ஏற்பட்டால், அதுவே நமக்கு முழு வெற்றி.

### மாநிலத்தின் பூந்தோட்டம் தமிழகம் ஆனால்...!

நான் படித்த உலக சரித்திரத்திலே, இந்நாடு போன்ற இயற்கையெழில், மலை, அதை முத்தமிட்டு, மேகம், அதன் பக்கத்தே இன்சோலை, சோலைகளிலே மானின் கூட்டம், மயிலின் ஆட்டம், நஞ்சை, புஞ்சை, சிங்கார நதிகள்—சிற்றூர்கள், காவிரியையும், வைகையையும் கண்டதில்லை. மாநிலத்தின் பூந்தோட்டமாகத் தமிழகம்தான் சிறந்து விளங்குகிறது. ஆனால், இங்கிருந்துதான், தமிழன் ரப்பர் தோட்டங்களுக்குக்கூலியாகச் செல்கிறான்! தங்கமிருக்கிறது அவன் காலடியில். ஆனால் அவன் வயிற்றிற்குச் சோறில்லை! தாயகத்தைவிட்டு அயல் நாடுகள் ஏகுகிறான். சிங்கள நாட்டிலே, அவனைச் சேனநாயகா வாட்டுகிறார், தென் ஆப்பிரிக்காவிலே மலான் கொடுமை செய்கிறான். இதற்குக் காரணம் என்ன என்று கேட்டால், 'இத்தனை ஆண்டுகள் நாம் வெள்ளையனுக்கு அடிமைப் பட்டிருந்ததே' என்று பதிலுரைக்கின்றனர் தேசியத் தோழர்கள். நான் கேட்கிறேன் காங்கிரஸ் தோழர்களை, வெள்ளையன் ஆட்சி புரிந்ததால்தான் இந்த வெங்கொடுமை என்றால், பத்து தமிழன் வெளிநாட்டுக்கு அடிமையாகச் செல்லும் போது, ஏன், இந்த மார்வாடிகளாவது சென்றாலும், செல்லவில்லை? மலேயாவிலும் மார்வாடியாக-வட்டிக் கடைக்காரனாகத்தானே இருக்கிறான்? தமிழன் வண்டியிழுக்கிறான்! ஏன் இந்நிலை! இக்காட்சியினை எண்ணிப்பார்க்கும் போதுதான், 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று நாம் கூற வேண்டியிருக்கிறது.

# தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

## 17 - 6 - 50

(காலை) நாகூர்:—
(மாலை) குடந்தை :— } சி. என். அண்ணாத்துரை, பெத்தாம் பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்.

## 18 - 6 - 50

**விருதுநகர் :**—சி. பி. சிற்றரசு.

**திருநெல்வேலி :**—என். வி. நடராசன்.

**நாகை :** சி. என். அண்ணாத்துரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்.

நாடுபிரிய வேண்டும் என்று நாம்கூறினால், நம்மீதுசீறுகின்றனர். பிரான்சும், ஜெர்மனியும் அடுத்தடுத்துள்ள சிறு சிறு நாடுகள். ஏன் பிரிவு அவைகளுக்குள்? தனித்தனியாக வாழ்ந்ததால்தான், ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு துறையிலே முன்னேற முடியும். உதாரணமாக டென்மார்க்கைப் பாருங்கள். அந்நாட்டில் பால் மட்டும், தயாரிக்கப்படுகிறது அங்கு தயாரிக்கப்படும் பால், இன்று நம் வீட்டிலும் உலவுகிறது காரணம், அது தன் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப தனித்திருப்பதால்—தன் சக்தியை வளர்த்துக்கொள்கிறது என்பதல்லாமல், வேறு என்ன காரணம் காட்டமுடியும்?

### தமிழ் நாட்டின் தத்துவம்

நாம சரித்திரத்தைப் படிக்கும்போது, ஒரு நாடுமற்றொரு நாட்டைப்பிடிக்க, கையாண்ட வகைகள் வியாபாரம், ராஜதந்திரம், போர் இம்மூன்றுதான். ஆனால், திராவிடநாடு அப்படிகைப்பற்றப்படவில்லை திராவிடர்களை, ஆரியர்கள் தோற்கடித்தார்கள் என்று சரித்திரத்திலேயே கிடையாது. வடநாட்டுக் கலாசாரம் வேறு-திராவிட கலாசாரம் வேறு. மனு, திருமன், அரிச்சந்திரன் ஆகியோர், தங்கள் விருப்பப்படி, நாட்டை வைத்துச் சூதாடவும், பிறருக்குத் தரவும் செய்தனர் ஆனால்,தமிழ் நாட்டின் தத்துவம். மக்களே மன்னன், மன்னனே மக்கள்.

### இன்றைய அடக்குமுறை பெரிதல்ல

இன்று அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்துப் பேசிய என் தோழர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன், 'பிறப்பிலே ஜாதி வேண்டும், அய்யர், ஆண்டி இருக்கத்தான் வேண்டும்' என்று வேதம் கூற—அதை மக்கள்கூற-அதை நாம் எதிர்க்க, நம்மை அரசாங்கம் தண்டிக்க முன் வந்தால், நாம் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதோ நாம் மதுரைக்குப் பக்கத்திலேதான் இருக்கிறோம், மதுரையிலே சைவ மதத்தைச் சந்தேகப்பட்டனர் என்ற காரணத்திற்காக, 8000 சமணர்களை மத வெறியர்கள் கழுவேற்றினார்கள். ஆகவே, இன்று அரசாங்கம் விடுகின்ற அடக்குமுறை பெரிதல்ல. நம்மைக் குற்றஞ் சாட்டி மூன்று ஆண்டு தண்டிக்கலாம், நம் பேச்சை ஒரு முறை மாஜிஸ்ட்ரேட் கேட்டிருந்தால் ஒரு ஆண்டு—அன்பிருந்தால் ஆறு மாதம்—அவரும் நம் கட்சியாயிருந்தால், அதுவுமில்லை!

பணப் பஞ்சத்தால், அரசாங்கம் இப்போது, சினிமாவில் அண்ணாத்துரை புகுந்துவிட்டானே ஆகவே, அவனைத் தொட்டால் ஐந்நூறு கிடைக்கும் என்று எண்ணி, என் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறது. அண்ணாத்துரை அவ்வளவு ஏமாந்தவனல்ல—அரைக்காசு கூட தரமாட்டான் என்பது நிச்சயம். ஆகவே, இங்கு பேசிய தோழர்கள் அச்சப்படத் தேவையில்லை, நம் அறிவுப் பணியினை-நம் கருத்தினை தைரியமாக எடுத்துச் சொல்ல வேண்டும். நிச்சயம் நாம் வெற்றிபெற்றுத்தான் தீருவோம்.

### கடவுள்?

காலையிலிருந்து நான் பார்க்கிறேன், இங்கு ஒருவராவது மதக்குறி, விபூதி பூசியவர்கள் தென்படுவார்கள் என்று. ஒரு இரண்டு பேரைக் கூடக் காணோம்! நாங்களென்ன விபூதி ஒழிப்பு மாநாடு போட்டோமா? உழைப்பு அதிகரிக்க, அதிகரிக்க-உண்மை உயர, உயர, மதம்-மடியும்-இருள் நீங்கும்.

இவைகளைக் கூறினால் நாஸ்திகம், பேசுகிறான் பார். 'கடவுள்' இல்லை என்கிறான் பார் பார் என்று, நம்மை அரைகுறையாகஅறிந்தவர்கள் கூறுகிறார்கள். நாங்கள் கடவுள் இல்லையா, இருக்கிறதா என்று கூறுவது இருக்கட்டும், நாங்கள் கூறுவது, நீ சொல்லுவது, கடவுளல்ல-நாங்கள் கடவுளைத் திட்ட வேண்டிய அவசியமில்லை காரணம், எங்கள் மீது கடவுளுக்கு அதிகப் பற்று உண்டு. இல்லையானால், பக்தர்களைச் சோதிக்கிற கடவுள், எங்களைச் சோதிக்கவில்லையே?

### இதுவா நாஸ்திகம்?

நான்கு நாட்கு முன்னே நான் வந்திருந்தகார்,சிதம்பரத்திலே தலைகீழாகக் கவிழ்ந்தது— ஒரு சிறு காயமும் படவில்லை நான் இந்தப் பணியிலே பணிரெண்டாண்டாக உழைத்து வருகிறேன். இதுவரையில் தொடர்ந்து பத்து நாட்களாகப் படுக்கையில் படுத்தது கிடையாது. இங்கே பாருங்களேன், நம் தம்பிமார்

(4-ம் பக்கம் பார்க்க)

# அடக்குமுறைகளைக் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களை, யாருக்குப் படிப்பில்லை? யாருக்கு உடலமைப்பில்லை? எங்களுக்கு ஆண்டவன் மீது கோபம் வருமா? வேண்டுமானல், ரமணர் ஆண்டவனைத் திட்டியிருப்பார் 'பாவி! எனக்குப் புற்று நோய் வைத்தாயே' என்று. நாங்கள் ஏன் 'ஆண்டவனைத்' திட்ட வேண்டும்? உங்களுக்கு ஒரு கதை சொல்லவிரும்புகிறேன் [...] மதுரை சோமசுந்தரபெருமானின். ஒருபார்ப்பன பக்தன், காமவயப்பட்டு, காத்திருந்து, தொட்டிலே வளர்த்தவளை, கட்டிலுக்கிழுத்தான்—பெண்டாடினன். நடக்கக்கூடாத செயல்! ஆனல் நடந்திருக்கிறது. தாய் அவனைப் பார்த்து, 'பாவி! அன்னையையா இந்த அக்ரமம் செய்தாய்' என்று கேட்க, உடனே அவன், அடபன் ஒருவன் எனக்கு இருப்பதால் அல்லவா நீ, எனக்கு அன்னையானுய், அவன் இல்லவிட்டால்...! நீ அப்புறம் ஒரு பெண்தானே, என எண்ணி அன்னை வெட்டிவீழ்த்தினன்! இரு மாபாதகம் செய்த அவன் மருட்சிக்கொண்டு, மதுரைக்கு வந்து ஆலவாய் அப்பனிடம் அடைக்கலம்புகுந்தான் அவ்ஞன். அதுபோது, சோமசுந்தர பெருமானும், மீனுட்சியம்மையும் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்க, அவன் குரல் கேட்ட பெருமான், ஆட்டத்தை நிறுத்த, உடனே அம்மை, அய்யனைப்பார்த்து 'ஏன் ஆடவில்லை'—என்று கேட்க, ஐயன், அன்னையை பெண்டாடிய அடியாரின் கருத்தை விளக்க, "அந்த மாபாவிக்கா அருள்புரிவது" என்று மீனுட்சி சிணுங்க, "உமையவளே! உற்றுக்கேள். எத்தகைய மாபாதகம் செய்தாலும், பிராமணன் என்றல், அருள்புரியத்தான் வேண்டும்" என்று கூறியதாகவும், அவன் முக்தி பெற்றான் என்று திருவிளையாடல் புராணம். நாங்கள் கட்டிய கதையா? இதுவென்றல் நாங்கள் நாஸ்திகர்களா? இதற்கு எத்தனை அடியார்கள்? இதனை அன்று வால்டேர் கண்டித்துப் பேசினன் பிரான்சிலே, இங்கே இருப்பது போன்ற சொக்கநாதரும், மீனுட்சியும், மாரியம்மனும் மதுரை வீரனும், கிருபானந்தவாரிகளும், அங்கேயும் இருக்கத்தான் செய்தனர். இன்று அவர்கள் வணங்கிய அப்பாலோ-அப்பாலோ மார்க்சைகளாயிற்று. ஜூபிடர் ஓர் தெய்வம்—இன்று பிக்சராயிற்று! அந்த ஆலயங்களெல்லாம் அறிவுத் தெள்வாலே, ஆராய்ச்சிக் கூடங்களாக மாற்றப்பட்டது. அவர்களெல்லாம் நாஸ்திகர்கள் என்று பொருள்?

அலவாடியார் இருப்பதுபோனல் மஞ்சள் துணியிலே பொட்டையடித்தோ, காவடி தூக்கியோ சென்றதில்லை—இரண்டாவது வகுப்புப் பிரயாணம்—எதிரிலே பெண்கள்—கையிலே பத்திரிகை. தமிழகரத்திற்கேற்ற, தரையிலே [...] கிருன்கோய்; தீர தீராத [...]வினையெல்லாம் தீர்த்து [...]ப்பாய் கோவிந்தா [...]ன்று. நோய்தீருமா? மாறாக, அதிகரித்ததானே செய்யும்? 'சிதம்பரம் போய் வந்தீர்களே எப்படி' என்று யாரையாவது

ஒரு அம்மையாரைப் பார்த்துக் கேளுங்கள், 'அப்பப்பா!' என்று சொல்லுவார்கள். அந்த 'அப்பப்பா!' விற்குள்ளே எவ்வளவோ ஆபாசம் அடங்கியிருக்கிறது. இவைகளையெல்லாம், கூறுவதுதான் நாஸ்திகமென்றல், நாங்கள் நாஸ்திகர்கள்தான் அதில் நாங்கள் பின் வாங்கியவர்கள் அல்ல. ஆகவே, இங்கு கூடியுள்ள நீங்கள், நீங்கள் பெற்றுள்ள பகுத்தறிவு உணர்ச்சியினை, பலருக்கும் பகர்ந்தளிக்க வேண்டும். நாம் சொல்வது வகுப்பு நீதிய தவிர, வகுப்புத் துவேஷமல்ல. இத்தகைய அறியாமையைப் போக்கி, மக்கள் பல துறையிலும் முன்னேற வேண்டும் என்பதே நம் அவா" என்று பேசி முடித்தார்.

• • •

## அன்பழகன்

அடுத்தத் தோழர் க. அன்பழகன் அவர்கள் தி. மு. க. எந்நிலையை உணர்த்த இல்லையென்றோம், தெளிவான திட்டத்தோடும் வரவேற்கிறது என்பதையும், பொது மக்களின் நன்மையைக் கருதியே இயக்கம் நடத்தப்படுகிறதே யன்றி, கட்சி நன்மைக்காக பொது மக்களின் நன்மையை கைவிட்டு இயக்கம் நடத்தப்படவில்லை என்றும் கூறினர். தொடர்ந்து பேசுகையில் நம் சமுதாயம் வீழ்ச்சியுற்ற பல துறைகளில் எழுச்சியுற்றவே தி. மு. கழகம் முன்பு திராவிடர் கழகமாக இருந்த போதும் சுயமரியாதை இயக்கமாக நடந்தபோதும், நீதிக்கட்சியாகத் தொடங்கியபோதும். பாடுபட்டு வந்துள்ளது. கல்வித் துறையில் அனைவருக்கும் இடம் கிடைக்கும்படி செய்ததும் நீதிக்கட்சியேயாகும்.

வகுப்புவாரி முறை ஏற்படுத்தப் பட்டகாரணத்தால்தான், திராவிட பெருங்குடி மக்களிலே பலர், கல்வியறிவுபெறும் வாய்ப்பு ஏற்பட்டது ஆனல், தாழ்த்தப்பட்ட மக்களிலே பலர், கல்வியறிவு பெறுவதைக்கூட சகிக்கவில்லை மேட்டுக்குடியினர். பல காலமாகவே, கல்வித் துறையைத் தங்கள் ஏகபோக மிராசாக அமைத்துக்கொண்டு இலாபம் அடைந்துவந்த கூட்டத்தார். அதே போன்று அரசாங்கப் பதவிகளை எல்லாம் கைப்பற்றிக்கொண்ட பார்ப்பன வகுப்பார், மற்றவர்களும் தங்கள் தங்கள் உரிமையைப்பெற்று வருவதைக் காணச் சகியாமல், வகுப்புவாரி முறையை நீக்கி, பல ஆண்டுகளாகவே முயற்சித்து வருகின்றனர்.

கேர்மையான முயற்சிபலிக்காததுகண்டு சூழ்ச்சியிலும் இறங்கியுள்ளனர். அண்மையில் ஏற்படுத்தப்பட்ட, பல்கலைக் கழக ஆய்வுக்குழு, சென்னை மாகாணத்தில், பல்கலைக் கழகங்களாலும் அரசாங்கத்தாலும் பின்பற்றப்பட்டுவரும், வகுப்புவாரிமுறை இனியும் நீடிக்கக்கூடாதென தீர்ப்புச் செய்தது. உண்மையில் இத்தீர்ப்பு நீடிக்கும் விஷயத்திற்கும் இன்னும் பிடிமைக்கும் முரண்பட்டதாகும். சென்னை மாகாணத்தில் வகுப்புவேறுபாடோ ஏற்பட்டுள்ள விளைவுகளை அறியாதவர்களும், ஆசிய இனத்தவரின் நல்வாழ்வை மட்டுமே மனத்தில் கொண்டவர்களுமே இடம் பெற்ற பல்கலைக் கழக ஆய்வுக்குழு, இக்குறிப்பை வெளியிட்டதைக் கண்டு, நாட்டு மக்களின் நல்வாழ்வைக் கருதும் அறிஞர்கள் திகைப்படைந்தார்கள். ஆனல், மதுவிலக்கும், தென்னை மரம் கல்விக்கொள்கையும் வகுக்கும் விதத்தில், இந்த அநீதியான போக்கை, ஒரு பட்ச நீதியை எதிர்த்து, சென்னைப் பல்கலைக்கழகச் செனட்டும் தீர்மானித்திருக்

பது பாராட்டுக்குரியதாகும்.

மேலும், நாட்டிலே, நாம் பெற்று வருகின்ற ஆதரவிற்கும், அடைந்து வருகின்ற வளர்ச்சிக்கும் இது ஓர் எடுத்துக்காட்டாகும். நமது தொண்டர்களையும் இலட்சியத்தையும், ஒரு காலத்திலே எதிர்த்தவர்களே மற்றொரு காலத்தில், ஏற்றுக் கொண்டிருப்பதையும் காண்கிறோம். நமது கழகம் மேலும் மேலும் ஆதரவு பெற்று வருகிறது. நாம் தேர்தலில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவில்லையென்றாலும், மந்திரிசபை அமைவராவிட்டாலும், சட்டசபைக்குப் போகாவிட்டாலும், நமது கொள்கைகள் வெற்றியடைவதைத்தான் காண்கிறோம்.

தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு சனாதன வர்ணாசிரம ஒழிப்பு, ஆகிய ஒவ்வொன்றிலும் சமுதாயத்தை மாற்றுவதைக்கொண்டே ஒவ்வோர் அளவிற்கு வெற்றி அடைந்துவந்துள்ளோம். எனவே-தோழர்கள் இலட்சியத்திலே ஆழ்ந்த நம்பிக்கைகொண்டு, இடங்களிலே-முழுமனத்தோடும் பாடுபட முன் வருவார்களானல், பெரும்வெற்றிகளை அடையமுடியும் என்று நம்புகிறேன்.

சமுதாய முன்னேற்றம் ஒரு தலைமுறையில் மட்டும் முடியக்கூடியதல்ல. சமுதாயத்தில் உயர்வு தாழ்வற்ற ஒரு சமுதாய அமைப்பைக் கண்டாக வேண்டும். பொருளாதாரத்தில் சமதர்மத்தை, பொதுவுடைமையைக் கண்டாக வேண்டும். அரசியலில், முழு விடுதலையை, உண்மை ஜனநாயகத்தை நிலைநாட்டியாக வேண்டும். மத்தியசர்க்கார். ஏதேனும் ஒன்றை மட்டும் எதிர்த்தோமானல் உடனடி பலன் காணக்கூட இயலும்.

இன்றைய சுயராஜ்யம் நம் தமிழ் வாழ்வை நோக்கும்போது, நமது கழக இலட்சியத்தின் உயர்வு விளங்காமற்போகாது.

இன்று நம்மைத் தவிர ஜனநாயகத்தை வேறு நாட்டின் வேறு எந்தக் கட்சியும் நாடியதாக இல்லை. காங்கிரஸ் ஜனநாயகத்தின் பெயரால் ஆட்சி நடத்துகிறது. அதனிடம் ஜனநாயகத்தை இருக்கிறது, ஆனல் சர்வாதிகார மனப்பான்மை வளர்ந்துள்ளதால், ஜனநாயகத்திற்கு இல்லாது போய்விட்டது. அதேபோல் சோஷலிஸ்ட் கட்சி உள்ளது தெளிவான திட்டம் இல்லாததால், ஜனங்களின் ஆதரவைப் பெறவில்லை, எனவே ஜனநாயகத்தைக் காக்கும் வழியில்லை. கம்யூனிஸ்ட் கட்சி — பொதுவிலே இருக்கிறது. கலகம் செய்கின்றனர் என்ற காரணம் காட்டி ஒடுக்கப்பட்டுள்ளதால், அவர்களுக்கும் ஜனநாயகத்திற்குமே தொடர்பு இல்லை. எனவேதான் ஜனநாயகத்தைக் காக்கும் தகுதியுடையதாக தி. மு. கழகந்தான் இருக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன்.

தோழர்கள், இந்த உண்மையை உணர்ந்து, கம்யூனிஸ்ட் வடநாட்டாரால் சுரண்டப்படாமல் இருக்கவும், நமது கலை, மொழி, நாகரிகம் காக்கப்படவும், நாமும் ஒரு உரிமையுள்ள இனமாகத் திகழவும், திராவிட இனத்தின் விடுதலைக்குப் பாடுபட முன்வரவேண்டும். திராவிடம், தென்னுடு, தன் உரிமை வாழ்வை எய்த, திராவிட மக்கள் முழு வாழ்வு பெற, ஜனநாயகம், மக்கள் ஆட்சி மலர, தி. மு. கழகத்தை வலுப்படுத்தவும், அதன் கொள்கைகளைப் பரப்பவும் அனைவரும் முன்வரவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

கடையிறுதித் தோழர்கள் என். எஸ். இளங்கோ, பொன்மலை பராங்குசம், டி. கே. சீனிவாசன், கே. எ. மதியழகன், இராச. தம்பரம், வி. பி. சித்தன், என். வி. நடராசன், இராமமிர்தத்தம்மையார், எம். எஸ். சிவசாமி, கே. கே. நீலமேகம் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தும், வழி

எத்தனையோ 'ஹேராயில்' இருந்திடினும்
அத்தனைக்கும் அப்பாலோர் 'பிரசிடெண்டாய்'
அமைந்திருக்கும் ஆற்றல் பெற்ற 'ஆயிலை'யும்
பிரசிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில் விந்தை கேளீர்!
ஒரு தடவை உபயோகம் செய்துபார்த்தால்
உற்சாகம் உங்களுக்கோர் தோழனுகி,
உல்லாசமாக கைகோர்த்து உலவி
உள்ளத்தில் மகிழ்ச்சியினை பெருகச்செய்யும்
புத்துணர்ச்சி பெற்றிடுவீர் புதுவாழ்வு எய்திடுவீர்
கோதிவிட்ட கூந்தலிலே கொஞ்சமிந்த ஹேர் ஆயில்
பூசி நீர் புறப்பட்டு போவீராகில்
வீதியெல்லாம் மணங்கமழும் விந்தை காண்பீர்
ஆகையினல் அட்டியின்றி ஓர் புட்டி
வாங்கி மகிழ்ந்திடவே வாருங்கள் தோழர்களே!

தாராபுரம் தொகுதியில்
30—6—50 ல் நடைபெறும்
சென்னை சட்டசபை தேர்தலில்
ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்
திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு
பச்சைப் பெட்டியில்
தயவுசெய்து ஓட்போடவும்
(விளம்பரம்)

## வெள்ளையரையே பார்த்திராத மலை ஜாதியினர்

லண்டன், ஜூன் 15

வெள்ளையர்களை இதுவரை கண்டறியாத இரு வகுப்பு மலை ஜாதியினர் பிரேஸிலில் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

மாராவது அப்பியர்கள் தெற்கட்டால் இவர்கள் தங்கள் வில்லையும், அம்புகளையும் ஒளித்து வைத்துக்கொண்டிருக்கிறார்களாம்.

இவர்கள் நிர்வாணமாகவே இருப்பதாகவும், மீன், ஆமை, பறவைகள் இவைகளை உண்டு காலம் தள்ளுவதாகவும் கூறப்படுகிறது.

மனிதன் மரக்கட்டைகளிலிருந்து தோன்றியதாக இவர்கள் கருதுகிறார்களாம்.

இம்மாதிரி இரு ஜாதியினர் இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்தவர் டொனர் டாக்டர் கரலெர்லோ ஓபொர் என்பதாகும்.

மொழிந்தும் பேசினர்கள் தீர்மானங்கள் எல்லாம் பலத்த கைதட்டுதல்களுக்கிடையில்ஏகமனதாக நிறைவேறியது.

இரவு 10 மணிக்கு தோழர்கள் அண்ணுத்துரை, கே. ஆர். ராமசாமி குழுவினரின் "சந்திரமோகன்" நாடகம் பட்டிவீரன்பட்டி தோழர் டபிள்யு. பு. அ. சௌந்திரபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. நாடகத்தில் சுமார் ஐந்து ஆயிரம் பேர்களுக்குமேல் வந்தபடியிட்டதால் போடப்பட்ட பந்தல் போதாது மக்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். இந்த இரண்டுநாள் மாநாடு மதுரை மாவட்டத்திலே ஓர் சிறப்புடைத்ததாயும், கிராம மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை உணரும்படியான சந்தர்ப்பத்தை உண்டாக்கி இருக்கிறது.

இத்துடன் நடந்த இரண்டு இனக்காக நடைபெற்ற வந்த மாநாடு, தலைவர் கள்திகூறவும், மிகவும் சிறப்பாக முடிவடைந்தது.

அறிவிப்பு

நெருஞ்சி மூட்டைப் பவுடர் மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரையைத் தருகிறது.

C. பழனியப்ப முதலியார், மதுரை.

## இனி நடப்பவை

சென்னை:—ஓட்டேரி, தி. மு. க. சார்பில், 18 6 50 மாலை மில்லர்ஸ் ரோட் 21ம் எண்ணுள்ள டைகர் கட்டிடத்தில், திடீர் மரணம் எய்திய தோழர் நாராயணசாமிக்கு அனுதாபக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் எஸ். சண்முகம், புலவர் வே. த. அர்ச்சனர், எம். மூர்த்தி, பி. ஜெகநாதன், எ. கே. சாமி ஆகியோர் பேசுவர்.

காலை 9மணிக்கு புலவர் தோழர் வே. த. அர்ச்சனர் குறள்வகுப்பு நடத்துவார்.

• • •

சாத்தம்பாக்கம்:—18-6-50 காலை 10-30 அளவில், தோழர் பொன்னம்பலம் அவர்கள் முன்னிலையில், தோழர் ஜமராமன், அவர்கள் இல்லத்தில், திராவிட முன்னேற்றக் கழகக் கொடி திறக்கப்படும். அதுபோது ஆர்வமுள்ள தோழர்கள் வரவேண்டுமென அழைக்கப்படுகிறர்கள்.

• • •

வேலக்கரைப்பட்டணம் கோட்டை, பொன்மலை:—18 6-50 காலை 7 மணிக்கு தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், தோழர் ஆர். முருகேசன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.

• • •

பட்டபுரம்:—18-6-50 அன்று இரவு 8 மணிக்கு, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கலைக்கழகத்தின் சார்பில், "நான் கண்ட பாரதி" என்னும் தலைப்பின்கீழ் பேசுவார்கள். தோழர்கள் கவிஞன், ஈ. வே. அ. வள்ளிமுத்து ஆகியோர் பேசுவார்கள். இடம் கலைப்பட்டி, முத்துமாரியம்மன் கோவில் முன்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.